Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்-வாராந்த பாடசாலை

**வாரம்**:-ஜுன் 28 ஜுலை 04

**பாடம்**: தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்

**தயாரிப்பு:** திருமதி.J.Lநிரோஷனி
இ/எம்பி/ஸ்ப்ரிங்வுட் த.வி இறக்குவானை


**தரம்**: 08

# அலகு 3 : சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள்.

## அட்டவணை உருவாக்கல்.

நிரல்களையும்(Rows) நிரைகளையும்(Coloumns) கொண்ட அமைப்பு அட்டவணை எனப்படும்.

நிரலும் நிரையும் ஒன்றுசேரும் இடம் **கலம்(cell)** எனப்படும்.




மேலுள்ள அட்டவணையில்,

நிரல் - 04
நிரை - 03
கலம் -12 காணப்படுகின்றது.

01.கீழுள்ள அட்டவணையில் நிரல்களின் எண்ணிக்கை நிரைகளின் எண்ணிக்கை கலங்களின் எண்ணிக்கை என்பவற்றை குறிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

1. நிரல்கள் 6 உம் நிரைகள் 4 உம் கொண்ட அட்டவணை ஒன்று வரைக.இதில் காணப்படும் கலங்களின் எண்ணிக்கை எத்தனை?

2. நிரல்கள் 5 உம் கலங்கள் 20 உம் கொண்ட அட்டவணையில் காணப்படும் நிரைகளின் எண்ணிக்கை எத்தனை?

3. நிரைகள் 6 கொண்ட அட்டவணை ஒன்றில் 18 கலங்கள் காணப்படுகின்றது. அட்டவணையில் காணப்படும் நிரல்களின எண்ணிக்கை எத்தனை?

4. கலங்களின் எண்ணிக்கையை கண்டறிய நிரல்களின் எண்ணிக்கைக்கும் நிரைகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான தொடர்பினை கட்டியெழுப்புக.

5. 25 கலங்கள் உடைய அட்டவணையில் நிரல்களின் எண்ணிக்கையும் நிரைகளின் எண்ணிக்கையும் சமன் என நிமாலி கூறினார்.இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.